தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C.12 / 2025

03.09.2025.

PW : 16

முருகானந்தம், த /பெ. முனுசாமி

சாட்சி மீண்டும் மனுவின்பேரில் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள விவரங்கள் எல்லாம் எனக்கு நினைவில் உள்ளது என்றால் சரிதான். நான் பெற்ற கடனுக்காக மாதாமாதம் சங்கத்தில் கடன்தொகையை செலுத்திவிடுவேன் என்று சொன்னதற்கு ஆதரவான ஆவணமான செலுத்திய ரசீதுகளை விசாரணை அதிகாரியிடம் காண்பித்து கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த ரசீதுகளை ஜெராக்ஸ் எடுத்துக்கொண்டு என்னிடம் கொடுத்துவிட்டார்கள்.

2) நான் சங்கத்திலிருந்து 2011 ல் கடன்பெற்றேன் பிறகு 2014 ல் கோட்டூருக் பணிமாறுதல் ஆகி சென்றுவிட்டேன். கடன் பெற்ற இரண்டு மாதங்களில் நான் பணிமாறுதல் பெற்று சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பணிமாறுலில் சென்றது தொடர்பான ஆவணங்களை பிரிவு 81 விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் அவர்கள் கேட்கவில்லை நான் கொடுக்கவில்லை.

3) நான் 2014 ஆம் ஆண்டு பணிமாறுதல் பெற்று வந்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் அதனால்தான் பணிமாறுதல் உத்தரவை விசாரணை அதிகாரியிடம் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 1 மாத தவணையை கூட திரும்ப செலுத்தவில்லை என்றால் சரியல்ல. மாதம்தோறும் பணத்தை முறையாக கொடுக்கவில்லை என்றாலும் அதனால்தான் அதற்குரிய ரசீது என்னிடம் இல்லை என்றாலும் சரியல்ல.

4) மாதாந்தர தவணை தொகை எவ்வளவு என்று தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் பெற்ற கடன்தொகையை முறையாக திரும்ப செலுத்தாததால்தான் மாத தவணை தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

5) நான் தடையில்லா சான்று பெறவில்லை என்றால் சரிதான். Last Pay Certificate பெற்றுதான் நான் பணியிடமாறுதலில் சென்றேன் என்றால் சரிதான். கடன் தொகையை நான் திரும்ப செலுத்தாததால்தான் தடையில்லா சான்று பெறவில்லை என்றால் சரிதான். என்னுடைய கடன்தொகையை திரும்ப செலுத்த கோரி சங்கத்திலிருந்து எனக்கு பல்வேறு கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

6) ஆஜர் எதிரியிடம் என்னுடைய கடன் தொகையை நேரடியாக கொடுத்து என்னுடைய கடன் தொகை கணக்கில் வரவுவைத்தேன் என்று சொன்ன சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல.

7) நான் கடன் பணத்தை திரும்ப செலுத்தாததால் அதை மறைக்க எதிரி மீது குற்ற ஈர்ப்பு வரவேண்டும் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரிவு 81 விசாரணை அதிகாரியிடம் நான் கொடுத்த வாக்குமூலம் தவறான சங்கதிகளை கொண்டது என்றால் சரியல்ல.

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.09.03 16:25:57 +0530

தலைமை நீதித்துறை நடுவர் ,

திருவாரூர்